A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

## மேல்முறையீட்டு மனு எண் 104 / 2022

திருமதி வ. மணி,
w/o. A. வடிவேலு,
223, பச்சாம்பாளையம்,
(மாரி அம்மன் கோவில் அருகில்),
பூசூர் (அஞ்சல்), ஈரோடு – 638 154.
அலைபேசி: 99449 33794

.........மேல்முறையீட்டாளர்
(Rep by திரு. சதீஷ்)

எதிர்

1. மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு, ஈரோடு – 638 009.

2. உதவி மின்பொறியாளர் /கணபதிபாளையம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கரூர் மெயின் ரோடு, கணபதிபாளையம் – 638 153.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு S. முத்துவேல், மேற்பார்வை பொறியாளர்,(i/c))
திரு. S. மேகநாதன், உதவி மின்பொறியாளர் /கணபதிபாளையம்)

**மனு பெறப்பட்ட நாள்: 08-12-2022**

**கேட்புரை நாள்: 16-02-2023**

**ஆணை நாள்: 06-03-2023**

08.12.2022 அன்று பெறப்பட்ட திருமதி வ . மணி, w/o. A. வடிவேலு, 223, பச்சாம்பாளையம், (மாரி அம்மன் கோவில் அருகில்), பூசூர் (அஞ்சல்), ஈரோடு – 638 154 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 104/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.02.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் , எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந் து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை</u>**

சர்வே எண் 855/1, பச்சாம்பாளையம் என்ற முகவரிக்கு ஒருமுனை மின் இணைப்பு வழங்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 வெண்டிபாளையம் உபகோட்டம் கணபதிபாளையம் பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட சர்வே எண் 855/1-ற்கு ஒருமுனை மின் இணைப்பு கோரி மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தின் அடிப்படையில் கள ஆய்வு மேற்கொண்டபோது கால்நடை பராமரிப்பு உபயோ கத்திற்காக அட்டை மற்றும் தகரத்தினால் அமைக்கப்பட்ட கொட்டகை அமைந்து இருந்ததாகவும் திரு கந்தசாமி , திரு விஸ்வநாதன் மற்றும் திரு செல்வகுமார் ஆகியோர் சர்வே எண் .859/5 வழியாக மின் இணைப்பு வழங்க ஆட்சேபனை செய்ததாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனது சர்வே எண்ணிற்கு மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற த்தை 16.04.2022 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் , ஈரோடு மின்பகிர்மான வட்டம் , 30.08.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 ஈரோடு மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.08.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது . அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *மின்இணைப்பு வழங்குவது குறித்து மின்நுகர்வோர் குறைதீர்க்கு ம் மன்றத்தில் 23.06.2022 விசாரணை நடைபெற்று மின் இணைப்பு வழங்க காவல்துறை பாதுகாப்புடன் வழங்குமாறு அறிவுறுத்தப்பட்டும் தொடர்ந்து ஆட்சேபனை தெரிவித்து வந்த திரு .மகேந்திரன் தரப்பிலிருந்து சட்டம் ஒழுங்கு பிரச்சனை நிலவுவதால் மனுதாரருக்கு தற்போது மின் இணைப்பு வழங்க இயலவில்லை என்பதாலும் திரு .S.மகேந்திரன் த /பெ சாமியப்ப கவுண்டர் , திரு.P.S.கந்தசாமி, த/பெ. சாமியப்பன், திரு. P.S.செல்வகுமார். த/பெ. சொங்கப்ப கவுண்டர் , ஆகிய ஆட்சேபனைதாரர்களால் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந் ததாலும் OS No . 230/2022ன் நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதாலும் திரு .ராஜேந்திரன் B.Sc.BL Advocate Notary Public Standing Counsel for TANGEDCO, ஈரோடு அவர்கள் கருத்துரை வழங்கியத ன் அடிப்படையிலும் ரீ .ச.எண் 859/5ல் மின் இணைப்பு வழங்க இயலாது என்றும் அவருடைய கருத்துரையின்படி ரீசஎண் .859/5 பாதையை தவிர்த்து மனுதாரர்க்கு புதிய மின் இணைப்பு கோரிய இடத்திற்கு மாற்று வழியில் மின் இணைப்பு வழங்க வேறு பாதை இருப்பின் அதற்கான உரிமை சான்றுடன் சமர்ப்பித்தால் மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இம்மன்றம் இறுதி உத்தரவு வழங்கப்படுகின்றது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>.

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.02.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளருக்கு பதிலாக திரு.சதீஸ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. முத்துவேல், மேற்பார்வை பொறியாளர் /ஈரோடு/(i/c) மற்றும் திரு C. மேகநாதன், உதவி மின்பொறியாளர் /கணபதிபாளையம், ஈரோடு மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது . குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள் , குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம் பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்:</u>

5.1 மின் இணைப்பை வழங்குவதற்கான TANGEDCO விதிகள் இருந்தும் . அருகில் இருக்கும் கம்பத்தில் இருந்து புதிய இணைப்பை கொடுக்க பக்கத்து இடத்து க்காரர்கள் ஆட்சேபனை தெரிவிக்க முடியாது என்று TANGEDCO சட்டம் இருந்தும், இணைப்பு ஏன் 6 மாதங்கள் தாமதமாகிறது என மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

5.2 அந்த பாதையில் 2 EB மின்கம்பங்கள் மற்றும் தெருவிளக்குகள் உள்ள தாகவும், அருகிலுள்ள EB போஸ்ட் சாலையின் குறுக்கே வெறும் 25 அடி தூரத்தில்தான் உள்ளதாகவும், அப்படி இருந்தும் ஏன் EB புதிய இணைப்பை கொடுக்க மறுக்கிறார்க ள் என மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.

5.3 2021 இல் எதிர்தரப்பின் மகேந்திரன் எண்.3226/2021 ல் உள்ள செக்குபந்தியில் இந்தத் தடத்தை சர்வே எண் 855/1ல் உள்ள தடத்திற்கு மேற்கு என்றும் 859/7ல் உள்ள தடத்திற்கும் மேற்கே என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இந்தப் பாதை தடமாகத் தான் காட்டப்பட்டுள்ள தாகவும், தங்கள் நிலமும் 855–1ல் தான் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 2020 இல் வட்டாட்சியர் அவர்கள் மகேந்திரன் அவர்களுக்கு வழங்கிய நில உரிமை சான்றிலும் சர்வே எண் 855/1 இல் உள்ள தடத்திற்கு மே ற்கு என்றும் 859/7 இல் உள்ள தடத்திற்கும் மேற்கே என்றும் குறிப்பிட்டு இந்தப் பாதையை தடமாகத்தான் தெரிவித்திருப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 VAO யிடமிருந்து இந்த பாதைக்கு தவறான சர்வே எண் போட்டு , போலி நில உரிமை ஆணைங்களைப் பயன்படுத்தி பொது பாதை யை நில அபகரிப்பு செய்ய மகேந்திரன் ஏமாற்றியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தங்களின் இணைப்பை மேலும் தாமதப்படுத்துவதற்காகவே ஒரு மாதம் முன்பு புதிதாக வேண்டுமென்றே தாக்கல் செய்யப்பட்ட புதிய நீதி மன்ற வழக்கைப்பற்றி வேண்டுமென்றே ஒரு காரணமாக தெரிவிக்கிறதாகவும், ஆனால் கடந்த 5 மாதங்களாக தங்கள் புதிய இணைப்பு ஏன் தாமதமானது , இந்த வழக்கே தவறானது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 கோர்ட்டில் கேஸ் போட்டிருந்தாலும் , நீதிமன்றத்தில் இருந்து தற்போது எந்த ஆர்டரும் இல்லாததால் , 100 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் ஒரு அண்டர்டேகிங் வாங்கி அருகில் இருக்கும் கம்பத்தில் இருந்து லைன் கொடுக்கலாம் என்று வழி உள்ள தாகவும், நீதிமன்ற இறுதி தீர்ப்பு மாறி வந்தால் லைன் எடுத்து கொள்ளலாம் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>**

6.1 மேல்முறையீட்டாளர் திருமதி.வ.மணி, க/பெ.வடிவேலு என்பவர் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் புஞ்சை காளமங்கலம் கிராமம், பச்சாம்பாளையம் ரீ.ச.எண்855/1ல் உள்ள புதிய குடியிருப்புக்கு ஒ ருமுனை 2 கிலோவாட் மின் இணைப்பு வேண்டி 07.04.2022 அன்று பதிவு செய்துள்ளார் . 11.04.2022 அன்று திரு .மகேந்திரன், த/பெ. சுப்பிரமணியம், திருமதி. லட்சுமி, க/பெ. மாணிக்கம், பச்சாம்பாளையம் அவர்களிடமிருந்து ரீ.ச.எண்859/5ன் வழியாக மின்பாதை அமைக்கக்கூடாது என்று ஆட்சேபனை பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 இதனை தொடர்ந்து மனுதாரர் 15.04.2022 அன்று மின் இணைப்புக்கான கட்டணம் ரூ .2818/-ஐ இணையதளம் வாயிலாக செலுத்தியுள் ளதாகவும், இளமின் பொறியாளர்/இ&ப/கணபதிபாளையம் அவர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும், மேலும் திரு .கந்தசாமி த /பெ.சாமியப்ப கவுண்டர் மற்றும் திரு.பாலசுப்பிரமணி ஆகியோர்க ளிடம் இருந் தும் ரீ.சர்வேஎண்.859/5ன் வழியாக மின் பாதை அமைக்ககூடாது என்று ஆட்சேபனை மனு பெறப்பட்ட தாகவும், எனவே மனுதாரர் 3.6.22 அன்று மின் நுகர்வோர் குறை தீரக்கும் மன்றத்தை அணுகி 23.6.2022 அன்று விசாரணை மேற்கொண்டு உத்தரவு வழங்கப்பட்ட தாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் ஈரோடு மாவட்ட ஆட்சியரின் 2022 ஜூலை மாதத்திற்கான சட்டம் மற்றும் ஒழுங்கு மாதாந்திர ஆய்வுகூட்டம் 12.07.2022 அன்று நடைபெற்றதில் வரிசை எண்.20-இல் மலையம்பாளயம் காவல் நிலையம் , கணபதிபாளையம் ஊராட்சி பச்சாம்பாளையம் மணி என்பவரின் வீட்டுக்கு மின் இணைப்பு தங்களின் பட்டா நிலம் வழியாக கொடுக்க எதிர் தரப்பினர் ஆட்சேபனை தெரிவித்து வந்த நிலையில் மேற்படி மணி என்பவர் மின் குறைதீர்ப்பு மன்றத்தில் முறையிட்டதின் பேரில் மின் இணைப்பு வழங்க உள்ளதால் எதிர் தரப்பினர் ஏதேனும் பேராட்டத்தில் ஈடுபட உள்ளார் என்ற பொருள் குறித் து விவாதிக்கப்பட்டதாகவும், எனவே ஆட்சேபனை இருந்ததால் மின் இணைப்பு வழங்குவதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இயலவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 இந்நிலையில் மனுதாரர் மேல்முறையீடு செய்த நிலையில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்து வழக்கு எண்: W.P.No.30440 of 2022 and W.P.No.29872 of 2022 ல் பதிவாகி , மேற்படி வழக்கின் உத்தரவில் குறிப்பிட்டுள்ளபடி மனுதாரர் மற்றும் ஆட்சேபனைதாரர்கள் 1.திரு. S.கந்தசாமி, த/பெ.சாமியப்பகவுண்டர் 2.திரு.S.விஸ்வநாதன் த/பெ சொங்கப்ப கவுண்டர் 3 திரு S. செல்வகுமார். த/பெ சொங்கப்பகவுண்டர் 4. திருS.ஜோதிலிங்கம், த/பெ.சதாசிவகவுண்டர். 5 திருமதி S. லட்சுமி க /பெ மாணிக்கம் . 6.திரு.S.மகேந்திரன் த /பெ. சுப்பிரமணியம், பச்சாம்பாளையம், பாசூர்- அஞ்சல், மொடக்குறிச்சி-தாலுக்கா, ஈரோடு- 638154 ஆகியோர்களை விசாரணை மேற்கொண்டு

மின்இணைப்பு வழங்கிட பரிசிலிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ள தாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேற்படி சென்னை உயர் நீதிமன்றத்தின் வழி காட்டுதல்படி 6 வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் ஈரோடு மின் பகிர்மான வட்டம் , ஈரோடு. மேற்பார்வை பொறியாளர் . அலுவலகத்தில் 28.12.2022 மற்றும் 29.12.2022 ஆகிய இரண்டு நாட்கள் மனுதாரர் மற்றும் ஆட்சேபனைதாரர்களிடம் விசாரணை நடைபெற்றதாகவும், விசாரணையில் ஆட்சேபனைதாரர்கள் மொடக்குறிச்சி தா லுக்கா, புஞ்சை கிராமம், ரீ.சர்வே எண்.855/1–ல் ஏற்கனவே மின் கம்பம் உள்ள நிலையில் அதன் வழியாக மின் இணைப்பு பெற முடியும் என்றும் , ரீ.சர்வே எண் 859/5–ன் வழியாக மின் இணைப்பு பெறுவதற்கு (6 நபர்கள்) ஆட்சேபணை தெரிவிக்கிறோம் என்றும் ரீ .சர்வே எண்.859/5 என்பது தங்களு க்கு மட்டுமே பாத்தியம் என்றும் தெரிவித்த தாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மனுதாரர் விசாரணையில் ரீ .சர்வே எண் 859/5ல் உள்ள வழித்தடம் ஆனது பொதுபாதை என்பதால் அதன் வழியாக மின் இணைப்பு வழங்கலாம் என்றும் மனுதாரரிடம் மின் இணைப்பு கோரும் இடமான ரீ .சர்வே எண்.855/1–க்கு செக்குபந்தி விபரம் கேட்டதற்கு வருவாய் துறையினரிடம் மின் கழகமே பெற்று கொள்ளுமாறு விசாரணையில் மேல்முறையீட்டாளர் வேண்டியுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே ரீ .சர்வே எண் .859/5ல் உள்ள வழித்தடம் யாருக்கு சொந்தம் என்பது தொடர்பான பி ரச்சனை இருதரப்பினருக்கும் இடையே உள்ளது என தெரிய வருகின்றதாகவும், மொடக்குறிச்சி, தாலுக்கா, புஞ்சை காளமங்கலம் கிராமம் ,ரீ.சர்வே எண்.855/1 க்கான செக்கு பந்தி, மற்றும் மேற்படி கிராமம் ரீ .சர்வே எண் .859/5ல் உள்ள வழித்தடம் யார்யாருக்கு பாத்தியம் என்பது குறித்த அறி க்கை மற்றும் மனுதாரர் ரீ.சஎண்859/5ன் வழியாக மட்டுமே மின் இணைப்பு வழங்க விசாரணையில் குறிப்பிட்டுள்ளதால் அப்பாதையில் உள்ள ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்னிணைப்பு வழங்க வழி செய்து கொடுக்குமாறு மின்சார சட்டம் 2003 பிரிவு 164ன்

படி மாவட்ட வருவாய் அலுவலர் , ஈரோடு மாவட்டம் , ஈரோடு அவர்களுக்கு கடித வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது எனவும், தனியாக இசைவிணக்க கூட்டம் ஏதும் நடத்தப்படவில்லை எனவும், மேலும் ஈரோடு முதல் கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் OS No .230/2022 என்று, திரு.S.கந்தசாமி, திரு.S.விஸ்வநாதன் மற்றும் நான்கு நபர்கள் ஆட்சேபனை தெரிவித்த வழக்கு பதிவு செய்து தற்போது எதிர்வாதுரை (Counter) தாக்கல் செய்ப்பட்டுள்ள தாகவும், தடையாணை எதுவும் பெறப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி.வ. மணி, க/பெ. A. வடிவேல், 223–பச்சாம்பாளையம், பாசூர்–அஞ்சல், மொடக்குறிச்சி–தாலுக்கா, அவர்கள் தன்னுடைய புதிய குடியிருப்பு உபயோகத்திற்காக 2 KW மின் பளுவுடன் ஒருமுனை மின் இணைப்பு வழங்கக் கோரி 7.4.2022 அன்று விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேற்கண்ட விண்ணப்பத்திற்கு திரு . S. மகேந்திரன் மற்றும் M. லட்சுமி, பச்சாம்பாளையம், அவர்களிடமிருந்து சர்வே எண் .859/5–ல் உள்ள தங்களது நிலத்தின் வழியாக மேல்முறையீட்டாளரு க்கு புதிய மின் வழித்தடம் அமைக்கக் கூடாது என்று 13.4.2022 அன்று ஆட்சேபனை கடிதம் பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 மேல்முறையீட்டாளர் புதி ய மின் இணைப்பிற்கு கட்டணமாக ரூபாய் 2818/–ஐ 15.4.2022 அன்று செலுத்தியுள்ளதாகவும் , அதனைத் தொடர்ந்து கணபதிபாளையம் பிரிவு அலுவலரால் 16.4.22 அன்று கள ஆய்வு செய்தபோது அவ்விடம் கால்நடை பராமரிப்பு உபயோகத்திற்காக அட்டை மற்றும் தகரத்தினால் அமைக்கப்பட்ட சுமார் 16x10 அளவுள்ள கொட்டகை அமைந்திருந்ததாகவும், குடியிருப்பு உபயோகத்திற்கான படுக்கை அறை, சமையலறை, கழிப்பிட வசதி போன்ற அடிப்படை வசதிகள் ஏதும் செய்யப்படாமல் இருந்ததாகவும் எனவே , புதிய மின் இணைப்பு கோரிய விண்ணப்பம் 18.4.22 அன்று

கணினியில் மேல் நடவடிக்கை ஏதுமின்றி நிறுத்திவைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 இந்நிலையில் 29.4.22 அன்று திரு. P.S. கந்தசாமி, த/பெ சாமியப்ப கவுண்டர் மற்றும் P.S. விஸ்வநாதன், P.S. செல்வகுமார், த/பெ சொங்கப்ப கவுண்டர் அவர்களும் ரீ .சர்வே எண்.859/5ல் தங்களுக்கு பாத்தியப்பட்ட பூமி உள்ளதாகவும் மேற்படி நிலத்தின் வழியாக மின் வழித்தடம் அமைக்கக் கூடாது என ஆட்சேபனை கடிதம் கொடுத் ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 ரீ.சர்வே எண் .859/5ல் உள்ள தடத்தில் மின்வாரியத்தால் 3 மின் கம்பங்கள் அமைக்கப் பெற்று தெரு விளக்குகள் ஒவ்வொரு மின் கம்பத்திலும் பொறுத்தப்பட்டு உபயோகத்தில் உள்ளதாகவும் . மேற்கண்ட மின்கம்பத்திலிருந்து ஏற்கனவே உள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு எண்கள் . 030–016–295, 030–016–165, 030–016–313, 030–016–312 வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.7 இந்நிலையில், நீதிமன்ற வழக்கு எண் .W.P. No.30440 of 2022 மற்றும் W.M.P. No.29872 of 2022 –ன் உத்தரவி ல் மேல்முறையீட்டாள ருக்கு ரீ .சர்வே எண் .855/1ல் புதிய மின் இணைப்பு வழங்குவது குறித்து மேல்முறையீட்டாளர் மற்றும் ஆட்சேபனைதாரர்களிடம் விசாரணை மேற்கொண்டு மின் இணைப்பு வழங்கிட பரிசீலிக்குமாறு எதிர்மனுதாரர் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

7.8 நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் , 28.12.22–ல் நடைபெற்ற விசாரணையில் ஆட்சேபனைதாரர்கள் ரீ .சர்வே.எண்.855/1ல் ஏற்கனவே மின்கம்பம் உள்ள நிலையில் அதன் வழியாக மின்இணைப்பு பெற முடியும் என்றும் ரீ .சர்வே எண் .859/5ன் வழியாக மின் இணைப்பு வழங்க தாங்கள் ஆட்சேபனை தெரிவித்ததாகவும் ரீ .சர்வே எண் .859/5 என்பது தங்களுக்கு மட்டுமே பாத்தியம் என்றும் , மேலும், அதற்குரிய பத்திரப்பதிவு ஆவணங்களை சமர்ப்பித்தாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.9 29.12.22–ல் நடைபெற்ற விசாரணையில் மேல்முறையீட்டாளர் ரீசர்வே எண்.859/5 ஆனது பொதுப்பாதை என்பதால் அதன் வழியாக மின் இணைப்பு வழங்கலாம் என்றும் ,

மேலும், ரீ.சர்வே எண் .855/1ற்கு செக்குபந்தி விவரம் வருவாய் துறையினரிடம் மின் வாரியமே பெற்று வழங்கிடுமாறு வேண்டியுள்ளார்.

7.10 எனவே, ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்குவதற்கு ஏதுவாக மொடக்குறிச்சி தாலுக்கா , புஞ்சை தாலமங்களம் கிராமம், ரீ.சர்வே எண் .859/5ல் உள்ள வழித்தடம் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரமும் மேற்படி கிராமம் ரீ .சர்வே எண் .855/1ற்கு செக்குபந்தி பற்றிய முழு விவரமும் வழங்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் ஈரோடு அவர்களை கேட்டுக்கொண்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.11 நீதிமன்ற வழக்கு எண் .W.P. No.30440 of 2022 மற்றும் W.M.P. No.29872 of 2022–இன் தீர்ப்பில் ரீ.சர்வே எண்.855/1ல் புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலிக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது . மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரையின் போது தான் நீதிமன்ற வழக்கு குறித்து தெரிய வந்துள்ளது. எனவே நீதிமன்ற தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளபடி மேல்முறையீட்டாளருக்கு ரீ .சர்வே எண் .855/1ல் புதிய மின் இணைப்பு வழங்க அதன் தொடர்ச்சியாக எதிர்மனுதாரர் எடுத்துவரும் நடவடிக்கை எதுவும் தன்னுடைய பதிலுரையில் தெரிவிக்கவில்லை

7.12 ஆகவே, முறையீட்டு மனு நிலுவையில் இருக்கும் நிலையில் நீதிமன்ற உத்தரவுபடி தொடர் நடவடிக்கையை ஏற்கனவே எதிர்மனுதா ரர் ஈடுபட்டு வருவதா லும், மேலும் பொதுபாதையில் மின்பாதை அமை க்கும் பணி எதிர்மனுதாரரையே சாரும் என்பதாலும் இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.13 மின்சார சட்டம் 2003, பிரிவு 164–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர் மான கழகத்திற்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசாங்கம் G.O.(Ms)No. 16 Energy (C3) Department, dated 23.02.2012–இல் ஆணை பிறப்பித்துள்ளது . எனவே, நான் இதுசம்பந்தமான விதிமுறைகளை

அறிந்துகொள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885—ன் பிரிவு 10—ஐ ஆராய விரும்புகிறேன். சட்டத்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

***"Part III***

***Power to Place Telegraph Lines and Posts***

***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*

2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*

3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*

4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers."*

7.14 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885—ன் பிரிவு 10—ன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் பிரிவு 10(4) —ன்படி ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ அமைக்கப்படவேண்டிய நேர்வில் இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின்படி நிலவுடமையாளருக்கு முழு நஷ்டஈடு தரப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

7.15 மேற்கூறிய இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின் படி உரிமதாரர் பொது இடத்தில் மின் கம்பங்கள் நடலாம் என்பது உறுதியாகிறது . இவ்வழக்கில் ரீ.சர்வே எண்.859/5ல் உள்ள தடத்தில் மின்வாரியத்தால் 3 மின் கம்பங்கள் அமைக்கப் பெற்று தெரு விளக்குகள் மற்றும் அக்கம்பத்திலிருந்து கு டியிருப்புகளுக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டு உபயோகத்தில் உள்ளதாகவும் அறியமுடிகிறது. தற்சமயம் வழங்கப்பட்ட

வழக்கு எண் .W.P. No.30440 of 2022 மற்றும் W.M.P. No.29872 of 2022–இன் தீர்ப்பில் ரீ.சர்வே எண் .855/1ல் புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலிக்குமாறு ஆணை வழங்கியுள்ளது. ஆனால், ஆட்சேபனைதாரர்கள் 1.திரு. S.கந்தசாமி, 2.திரு.S.விஸ்வநாதன், 3.திரு S. செல்வகுமார், 4. திருS.ஜோதிலிங்கம், 5 திருமதி S. லட்சுமி, 6.திரு.S.மகேந்திரன் ஆகியோர்க ள் தொடர்ந்த O.S.No.230/2022 தற்பொழுதுவரை தொடர்வதாக கொடுக்கப்பட்டுள்ள ஆவணங்களி ன்மூலம் அறியவருகிறது. மேலும் அவ்வழக்கின் எதிர்மனுதாரர்களான 1 முதல் 4 வரையிலான வாரியதரப்பு அதிகாரிகளுக்கு ஆட்சேபனைதாரர்களின் நிலத்தின் வழியே மின்பாதை அமைத்து மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாது தற்போது உள்ள நிலையே (Status quo) தொடர வேண்டமென 06.01.2023 அன்று கருத்துரு வழங்கப்பட்டு 20.2.2023 வரை அதே நிலையே தொடர்ந்து நீடிப்பதையும் அறியமுடிகிறது. மேற்படி வழக்கு எண் O.S.No.230/2022 மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அந்த வழக்கு நிலுவையிலுள்ளதால் இதுகுறித்து மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“17. xxx xxx xxx*
*xxx xxx xxx*
*(4) கீழ்க் குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சார குறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர், மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர் குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்தமுறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்க வேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்தி ஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு 17 (1) ல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதி மன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது.”*

7.16 மேற்கண்ட விதியினை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது முறையீட்டிலுள்ள புகார் சம்பந்தமான வழக்கு நீதிமன்ற நடவடிக்கையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கெனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின் குறைதீர்ப்பாளர் ஏற்க முடியாது என்று தெரிகிறது.

7.17 ஆனால் தற்போது என் முன்னால் மேல்முறையீட்டாளரால் கோரப்படும் கோரிக்கை சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு எண்.W.P. No.30440 of 2022 மற்றும் W.M.P. No.29872 of 2022–இன் தீர்ப்பில் ரீ.சர்வே எண்.855/1ல் புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலிக்குமாறு ஆணை வழங்கியுள்ளது . மேலும் திரு .கந்தசாமி முதலான 6 நபர்கள் தொடர்ந்த O.S.No.230/2022 வழக்கில் வாரியதரப்பு அதிகாரிகளுக்கு ஆட்சேபனைதாரர்களின் நிலத்தின் வழியே மின்பாதை அமைத்து மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாது தற்போது உள்ள நிலையே (Status quo ) தொடர வேண்டமென 06.01.2023 அன்று கருத்துரு வழங்கப்பட்டு 20.2.2023 வரை அதே நிலையே தொடர்ந்து நீடிக்கின்றது . அவ்வாறு உள்ள நேர்வில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க முடியாது என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கண்ட பத்திகளில் உள்ள தீர்வுகளின்படி, மேல்முறையீட்டாளரால் கோரப்படும் கோரிக்கை சம்பந்தமாக ஏற்கனவே வழக்கு எண் .W.P. No.30440 of 2022 மற்றும் W.M.P. No.29872 of 2022–இன் தீர்ப்பில் ரீ .சர்வே எண் .855/1ல் புதிய மின் இணைப்பு வழங்க பரிசீலிக்குமாறு ஆணை வழங்கியுள் ளது. மேலும் திரு .கந்தசாமி முதலான 6 நபர்கள் தொடர்ந்த O.S.No.230/2022 வழக்கில் வாரியதரப்பு அதிகாரிகளுக்கு ஆட்சேபனைதாரர்களின் நிலத்தின் வழியே மின்பாதை அமைத்து மின்னிணைப்பு வழங்குவது சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாது தற்போது உள்ள நிலையே (Status quo) தொடர வேண்டமென 06.01.2023 அன்று கருத்துரு வழங்கப்பட்டு 20.2.2023 வரை அதே நி லையே தொடர்ந்து நீடிக்கின்றது . எனவே, மின் நுகர்வோர்

குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி17(4)(ஈ)இன்படி மின்குறைதீர்ப்பாளர் இந்த மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக்கொண்டு தீர்வு எதுவும் வழங்க இயலாது என முடிவு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் .104/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
**மின்குறைதீர்ப்பாளர்**

"நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திருமதி வ. மணி, – By RPAD
w/o. A. வடிவேலு,
223, பச்சாம்பாளையம்,
(மாரி அம்மன் கோவில் அருகில்),
பூசூர் (அஞ்சல்), ஈரோடு – 638 154.
அலைபேசி: 99449 33794

2. மேற்பார்வை பொறியாளர்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
948, இ.வி.என். ரோடு, ஈரோடு – 638 009.

3. உதவி மின்பொறியாளர் /கணபதிபாளையம்,
ஈரோடு மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
கரூர் மெயின் ரோடு, கணபதிபாளையம் – 638 153.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.